**AIDS safety guidelines with illustrations (Malayalam version); part 1 of 2 posters by the State AIDS Project Cell with support from Unicef. Colour lithograph by the Centre for AIDS Research and Control (CARC), ca. 1997.**

**Contributors**

UNICEF.

**Publication/Creation**

[Madras (417, Pantheon Road, Madras 600 008)] : [Printed and published by: The Project Director, State AIDS Project Cell ... with support from Unicef], [1997?]

**Persistent URL**

https://wellcomecollection.org/works/ugsdhyvq

**License and attribution**

You have permission to make copies of this work under a Creative Commons, Attribution, Non-commercial license.

Non-commercial use includes private study, academic research, teaching, and other activities that are not primarily intended for, or directed towards, commercial advantage or private monetary compensation. See the Legal Code for further information.

Image source should be attributed as specified in the full catalogue record. If no source is given the image should be attributed to Wellcome Collection.

wellcome collection

Wellcome Collection
183 Euston Road
London NW1 2BE UK
T +44 (0)20 7611 8722
E library@wellcomecollection.org
https://wellcomecollection.org

டாக்டர்களுக்கு...

# எய்ட்ஸ் பாதுகாப்பு வழி முறைகள்

**1**

உங்களால் பரிசோதிக்கப்படும் நோயாளிகளில் ஒருவர் "எய்ட்ஸ் நோய்" கிருமியால் பாதிக்கப் பட்டிருக்கிறார் என்பதை நீங்கள் அறிந்திருக்க மாட்டீர்கள்.

எய்ட்ஸால் பாதிக்கப் பட்டிருப்பது நோயாளிக்கே தெரியாது

அதனால் உங்களிடம் அவர் சொல்லாமல் விட்டிருக்கலாம்

**அல்லது**

நோயாளிக்குத் தான் பாதிக்கப்பட்டிருப்பது தெரியும்

தெரிந்தும் தெரிவிக்காமல் இருக்கலாம்

விரைவில் தெரிவிக்கக்கூடும்

பீதி அடையவேண்டாம் ▶ ஹெச் ஐ வி மற்றும் எய்ட்ஸ் பற்றிய சில விவரங்களைத் தெரிந்து கொள்ளுங்கள்

## பரவும் வகை




நோய் உண்டாக்குகிற அளவுக்கு கிருமிகள் இருப்பது :
ரத்தம்-ஆண் விந்து-பெண்குறி கசிவு நீர்

## இவற்றால் பரவாது




எச்சில் மற்றும் கண்ணீரில் மிகக் குறைந்த அளவு கிருமிகளே இருப்பதால், இவற்றின்மூலம் எய்ட்ஸ் தொற்றுவதில்லை. **தாய்ப்பால் மூலம் பரவுவது மிகக் குறைவு**

## நோய்பற்றிய முழு விவரமும் தெரிந்திருக்க வேண்டும்

### 1 யாரிடம் கேட்க வேண்டும் ?

- ✦ **பால்வினை நோயாளிகள் / பால்வினை நோயால் முன்பே பாதிக்கப் பட்டிருந்தவர்கள்**
- ✦ **கீழ்க்கண்ட நோய் குறிகளுள்ள நோயாளிகள்**
- ❖ காரணம் தெரியாத எடை குறைவு 10% மேல்
- ❖ நீண்ட நாள் வயிற்றுப்போக்கு
- ❖ 15 நாட்களுக்கு மேற்பட்ட இடைவிடாத இருமல்
- ❖ வாய் மற்றும் தொண்டையில் காளான் நோயால் மாவு படிதல்
- ❖ ஹெர்ப்பீஸ் ஸாஸ்டர் எனப்படும் விளையாட்டு அம்மை கொப்புளங்கள்
- ❖ பாலுண்ணி கொப்புளங்கள்
- ❖ நாக்கில் அடர்த்தியாக மாவு படிதல்


தயாரிப்பு
செண்டர் ஃபார் எய்ட்ஸ் ரிசர்ச் அண்ட் கண்ட்ரோல், பம்பாய்.

தமிழாக்கம் : பிந்துமாதவன் I.A.S., க. காந்தராஜ், தேவராசன்.


### 2 என்ன கேட்க வேண்டும்

- ✦ **உடலுறவு பழக்கங்கள்**
- ❖ ஆண்-பெண் / ஆண்-ஆண் / ஆண்-பெண்-ஆண் உடலுறவுகள்
- ❖ எத்தனை பேருடன் உடலுறவு
- ❖ எப்படிப்பட்டவருடன் உடலுறவு (விலைமாது / கிடைத்தவரோடு / நிரந்தரமாக ஒருவருடன்
- ❖ எந்த இடத்தில் உடலுறவு
- ❖ ஆணுறை அணிதல் (எப்போதும் அல்லது உபயோகிப்பது இல்லை)
- ✦ **ரத்தம் செலுத்தப்பட்டது பற்றியதகவல்**
- ❖ ரத்தக் கூறுகள் (மொத்த ரத்தம் / பிளாஸ்மா போன்றவை)
- ❖ எய்ட்ஸ் பற்றிய முன்தகவல் (கொடுக்கப்பட்டது அல்லது இல்லை)
- ✦ **போதை மருந்து பழக்கம்.**
- ❖ எந்தவகை, எந்த முறையில் (வாய்மூலம், ஊசிமூலம்) ஊசிகளை அடுத்தவரோடு பகிர்ந்து கொள்ளுதல்.

### 3 எய்ட்ஸ் நோய்க்காக பரிசோதனை செய்ய முடிவெடுத்தால் - நினைவில் கொள்ளுங்கள்

- ❖ இந்தப் பரிசோதனை பாதிக்கப்பட்ட நபரின் நன்மைக்காக செய்யப்பட வேண்டும். மற்றபடி அவரை எய்ட்ஸ் நோயாளி என்று அடையாளம் காட்டவோ அல்லது சமூகத்திலிருந்து ஒதுக்கவோ அல்ல.
- ❖ எய்ட்ஸ் உள்ள நபரை பராமரிக்க மறுப்பது மருத்துவ தர்மத்திற்கு எதிரானது.
- ❖ எய்ட்ஸ்க்காக பரிசோதனை செய்யுமுன் அந்த நபரின் **அனுமதியை பெறுவது அவசியம்.**
- ❖ பரிசோதனைக்கு முன்னும் பின்னும் நோய் பற்றிய முழு ஆலோசனைகள் மற்றும் விவரங்கள் தருவது.
- ❖ நோயாளியைப் பற்றிய தகவல்கள் ரகசியமாக வைக்கப்படுவது அவசியம்.
- ❖ நோயாளியின் வாழ்க்கைத் துணைக்கு நோய் பற்றிய தகவலை நோயாளியே தெரிவிக்க வேண்டும் என்று ஒப்புக் கொள்ளச் செய்யுங்கள்.

### 4 பாதுகாப்பு

**பொதுவான நோய்த் தொற்றுப் பாதுகாப்பு முறைகளை அனுசரியுங்கள். கீழ்க்கண்டவற்றைப் பழக்கமாக்கிக் கொள்ளுங்கள்.**

- ❖ பொதுச் சுகாதார நெறிமுறைகள். ★
- ❖ நன்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பாதுகாப்பு அணிகலன்கள். ★★
- ❖ நன்கு கிருமிநீக்கம் செய்யப்பட்ட உபகரணங்கள்/ கருவிகளையே உபயோகியுங்கள். ★★★
- ❖ உயர்தர கிருமிநாசினிகளை உபயோகியுங்கள். ★★★★
- ❖ உபயோகித்த உபகரணங்களை நன்கு சுத்தம் செய்யுங்கள் அல்லது அழித்து விடுங்கள். ■
- கையுறைகளை அணிந்து கொண்டு கூர்மையான உபகரணங்களை உபயோகியுங்கள்.
- பயன்படுத்தப்பட்ட ஊசிகளை மீண்டும் மூடியில் நுழைக்க வேண்டாம்.


அச்சிட்டு வெளியிட்டோர் :
திட்ட இயக்குனர் ; எய்ட்ஸ் நோய்க் கட்டுப்பாட்டு சங்கம்
417, பாந்தியன் சாலை, சென்னை - 600 008.
தொலைபேசி எண் : 8255467


தொடரும்...2